**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

**எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.**

**தொலைபேசி: 044 – 22201337**

**மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in**

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

*******

**ஆணை எண். 034/ந/2022**

**நாள். 28.04.2022**

| | | |
|---|---|---|
| திரு. A.S. மோகன்,<br>சென்னை. | – | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையாளர்,<br>பல்லவபுரம் நகராட்சி<br>தற்போது தாம்பரம் மாநகராட்சி. | – | எதிர்மனுதாரர் |

சென்னை 600 044, குரோம்பேட்டை, தி.சு.லட்சுமணன் நகர், முதல் தெரு, கதவு எண்.8 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A.S. மோகன், என்பவரின் 31.08.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.09.2021 அன்று பெறப்பட்டு 034/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## <u>ஆணை</u>

சென்னை 600 044, குரோம்பேட்டை, தி.சு.லட்சுமணன் நகர், முதல் தெரு, கதவு எண்.8 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A.S. மோகன், என்பவர் 31.08.2021 நாளிட்ட தனது மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016–ன்படி செங்கல்பட்டு மாவட்டத்திற்குட்பட்ட பல்லவபுரம் பெருநகராட்சி தற்போது தாம்பரம் மாநகராட்சி மூலம் வணிக வளாகம், உணவகங்கள், மருத்துவமனைகள், நிறுவனங்கள், இதர ஸ்டோர்ஸ், கடைகளிலிருந்து பெறப்படும் கழிவுகள் மற்றும் குப்பைகளை அகற்றுவதற்கு சேவை கட்டணம் முறையாக நகராட்சி கணினி மூலம் பணப்பற்று பெறாமல் அதனை லஞ்சமாக சம்மந்தப்பட்ட அனைத்து துப்புரவு ஆய்வாளர்கள் பெற்று அதனை நகராட்சி ஆணையர் மற்றும் துப்புரவு அலுவலர் இவர்களுக்கு பங்கு தொகையாக கொடுத்து வருகிறார்கள். இது சம்மந்தமாக மனுதாராகிய நான் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் முன்பாக, மனுதாக்கல் செய்ததின் பேரில் மனு குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதில் தமிழ்நாடு உள்ளாட்சி

அமைப்புகளின் முறைமன்றம் எதிர்மனுதாரரை விசாரணைக்கு அழைக்காமல் மனுதாராகிய என்னிடம் மட்டும், விசாரணைச் செய்யப்பட்டது. அதன்படி மனுதாராகிய நான், பல்லவபுரம் நகராட்சி மூலம் 1. சரவணா ஸ்டோர்ஸ், 2. அடையாறு ஆனந்தபவன், 3. புஹாரி ஹோட்டல், 4. தி சென்னை சில்க்ஸ், 5. பாலாஜி பவன், 6. ஸ்ரீ பாலாஜி சிறப்பு மருத்துவமனை ஆகியவற்றில் உள்ள கழிவுகள் மற்றும் குப்பைகளை அகற்ற நகராட்சி கணினி மூலம் பெறப்படும் சேவைக்கட்டணத்திற்கான பணப்பற்று ரசீதை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் முன்பாக தாக்கல் செய்ய எதிர்மனுதாரருக்கு ஆணையிடுமாறு மனுதாராகிய நான் கோரிக்கை வைத்தேன். அதனை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்றம் ஏற்காமல் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மேற்படி சேவைக் கட்டணத்திற்கான பணப்பற்று ரசீது பெற்று, அதில் மனுதாரருக்கு முறைகேடு ஏதாவது இருப்பதாக கருதினால், இம்முறைமன்றத்தில் மனுதாக்கல் செய்யுமாறு மேற்படி மனுவை கடந்த 25.04.2017 அன்று தள்ளுபடி செய்து இம்முறைமன்ற மூலம் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன் நகல் இத்துடன் இணைத்துள்ளேன்.

அதன்படி மனுதாராகிய நான், தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005–தின்படி கடந்த 01.01.2000 முதல் 21.03.2020 வரை உள்ள சேவைக் கட்டணம் பெறப்பட்ட கணினி பணப்பற்று ரசீதை பல்லவபுரம் நகராட்சியில் கேட்டுக் கொண்டதின் பேரில் தரப்படவில்லை. இதன் காரணமாக, உயர்திரு மாநில தலைமை தகவல் ஆணையர், மாநில தகவல் ஆணையம், சென்னை 18, அவர்களிடம் இரண்டாவது மேல்முறையீடு மனு செய்ததின் காரணமாக, கீழ்கண்ட தகவல்கள் ஆவணங்கள் மூலம் பெறப்பட்டுள்ளது.

- சரவணா ஸ்டோர்ஸ் பணப்பற்று ரசீது நாள்
  3.08.2015, 07.03.2015, 07.10.2015, 03.04.2016, 14.06.2016, 17,10.2016, 11.01.2017, 17.08.2017, 11.01.2017 மற்றும் 07.01.2021.

- அடையாறு ஆனந்தபவன் பணப்பற்று ரசீது நாள்
  தகுந்த கணினி மூலம் வரவு வைத்த பணப்பற்று ரசீது இல்லை. தயார் செய்யப்பட்ட ரசீது தரப்பட்டுள்ளது.

- புஹாரி ஹோட்டல் பணப்பற்று ரசீது நாள்
  11.12.2014, 26.05.2015, 03.04.2015, 16.02.2016, 16.04.2016, 12.03.2016, 10.02.2017, 07.01.2017,

- ஸ்ரீ பாலாஜி பவன் பணப்பற்று ரசீது நாள்
  05.02.2015, 09.03.2015, 13.01.2016, 12.02.2016.

- தி. சென்னை சில்க்ஸ் பணப்பற்று ரசீது நாள்
  பல்லவபுரம் நகராட்சி மூலம் சேவைக் கட்டணம் பெறப்பட்டதற்கான பணப்பற்று ரசீது தரப்படவில்லை.

- ஸ்ரீ பாலாஜி சிறப்பு மருத்துவமனை பணப்பற்று ரசீது நாள்.
09.12.2015, 01.11.2015, 18.08.2015, 25.09.2015, 11.03.2016, 14.11.2016, 17.10.2016, 10.09.2016, 16.08.2016, 05.07.2016, 15.06.2016, 28.04.2016, 11.03.2016, 10.02.2016, 12.12.2017, 27.11.2017, 26.10.2017, 17.08.2017, 14.07.2017, 28.06.2017, 09.06.2017, 30.03.2017, 13.02.2017, 09.11.2017, 07.03.2018, 16.02.2018.

மேற்படி சேவைக்கான கட்டணம் அதாவது ஒரு வருடத்திற்கு 12 மாதங்கள் கணினி மூலம் பணப்பற்று பெற்றதற்கான முறையான ரசீது எதிர்மனுதாரராகிய பல்லவபுரம் நகராட்சி நிர்வாகத்திடம் இல்லை. மேலும் மனுதாரராகிய நான் 2005ன்படி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 01.01.2000 முதல் 21.03.2020 வரை பெறப்பட்ட சேவைக் கட்டணத்திற்க்கான கணினி பணபற்று ரசீது முறையாக தரப்படவில்லை என்பது குறிப்பிடப்படத்தக்கது. இதன்மூலம் சேவை கட்டணத்தை சம்மந்தப்பட்ட பல்லவபுரம் நகராட்சி துப்புரவு ஆய்வாளர்கள், அலுவலர் மற்றும் ஆணையாளர் இவர்கள் லஞ்சமாக பெற்று முறைக்கேடு செய்வதை உறுதிச் செய்கிறது. இதன் மூலம், பல்லவபுரம் நகராட்சி நிர்வாகத்திற்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது.

இது சம்மந்தமாக, விரிவான விசாரணை செய்து உரிய ஆணைப் பிறப்பிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 29.03.2022 நாளிட்ட கடிதம் மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் அறிக்கைக் கோரப்பட்டது.

தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் தமது 04.04.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் புகார் தொடர்பாக கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:–

“தாம்பரம் மாநகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு திடக்கழிவு மேலாண்மை சேவைக்கட்டணம் சொத்து வரியுடன் சேர்த்து வசூலிக்கப்பட்டு கணினி மூலம் ரசீது வழங்கப்பட்டு வருகிறது. புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள 1. சரவணா ஸ்டோர், 2. அடையாறு ஆனந்த பவன், 3. புஹாரி ஹோட்டல், 4. பாலாஜி பவன், 5. தி சென்னை சில்க்ஸ், 6. ஸ்ரீபாலாஜி சிறப்பு மருத்துவமனை ஆகிய நிறுவனங்களின் திடக்கழிவு சேவை கட்டணம் சொத்துவரியுடன் சேர்த்து கணினி மூலம் ரசீது வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இணையதளத்தின் முலமாக சொத்து வரியுடன் சேவை கட்டணம் செலுத்தவும் உரிய வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே, குடியிருப்பு மற்றும் வணிக நிறுவனங்களில் நேரடியாக சேவை கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை” என்று தெரிவித்துள்ளார்.

3) இம்முறைமன்ற 29.03.2022 நாளிட்ட அழைப்பாணை மூலம் மனுதாரர் திரு.A.S.மோகன், மற்றும் தாம்பரம் மாநகராட்சி ஆணையர் ஆகியோர் 05.04.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு ஆணையிடப்பட்டது. 05.04.2022 அன்று விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் திரு.A.S.மோகன் அவர்கள் கீழ்காணுமாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:-

“தாம்பரம் மாநகராட்சியின் மூலம் சரவணா ஸ்டோர்ஸ், அடையாறு ஆனந்த பவன், புஹாரி ஹோட்டல், சென்னை சில்க்ஸ், பாலாஜி பவன் மற்றும் ஸ்ரீபாலாஜி சிறப்பு மருத்துவமனை போன்றவற்றிற்கு சொத்து வரி விதித்தல் மற்றும் வரி வசூல் செய்யும்போது சொத்து வரியை மட்டும் நகராட்சியினர் வசூல் செய்து வருகின்றனர். ஆனால், சொத்து வரியுடன் கூடிய திடக்கழிவுக்கான வரியை (SUC) கணினி மூலம் பணப்பற்று பெறாமல், போலி ரசீதினை அளித்து, மேற்கண்ட வரிக்கான தொகையை பணமாகப் பெற்று நகராட்சி அலுவலர்கள் முறைகேடு செய்து வருகின்றனர். எனவே, சட்டத்திற்கு புறம்பாக சொத்து வரியுடன் திடக்கழிவுக்கான வரியை சேர்த்து வசூலிக்காமல், போலி ரசீது கொடுத்து திடக்கழிவுக்கான வரித்தொகையை மாநகராட்சி அலுவலர்களே பணமாக வசூலிப்பதை தடுத்து நிறுத்திடவும், இதுபோன்ற முறைகேடுகளில் ஈடுபடும் மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது 05.04.2022 நாளிட்ட விளக்க உரையையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் திரு.A.S.மோகன் தனது 05.04.2022 நாளிட்ட விளக்க உரையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நிறுவனங்கள் / ஸ்டோர்ஸ் / கடைகள் / ஹோட்டல்கள் / மருத்துவமனைகளிலிருந்து தாம்பரம் மாநகராட்சி மூலம் பெறப்படும் கழிவுகள், குப்பைகளை எடுக்க, முறையாக, சேவைக் கட்டணம் மாதம் மாதம் கணினி மூலம் பணப்பற்று ரசீது வரவு வைக்காமல், அதனை லஞ்சமாக பெற்று முறைகேடு செய்த வருடம் 01.01.2017 முதல் 21.03.2020 வரை விசாரணைக்கு எடுத்து கொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த முறைகேடு சம்மந்தமாக, கடந்த 2017–ல் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் அவர்களிடம் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதன் மேல் முறையீட்டு மனு எண்.009/2017/ந, ஆணை எண்.075/2017, நாள்.25.04.2017.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005–ன் கீழ் சேவைக் கட்டணம், பணப்பற்று ரசீது ஆவணங்களை பெற்று அதில் லஞ்சம் பெற்று முறைகேடு இருப்பதாக கருதினால் மனுதாரர், மனு தாக்கல் செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது.

i. சரவணா ஸ்டோர்ஸ், அடையாறு ஆனந்தபவன், புஹாரி ஹோட்டல், பாலாஜி பவன், தி சென்னை சில்க்ஸ், ஸ்ரீபாலாஜி சிறப்பு மருத்துவமனை ஆகிய நிறுவனங்களிடமிருந்து கழிவுகள் குப்பைகளை, எடுக்கக் சேவை கட்டணம் பெறப்பட்டதற்கான கணினி மூலம் வரவு வைத்துள்ள பணப்பற்று ரசீது அதாவது 01.01.2000–படி 21.03.2020 வரைக்கான ஆவண நகல்களை தருமாறு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கடந்த 21.03.2020 அன்று முதல் மனுவும், அதை தொடர்ந்து முதல் மேல் முறையீட்டு மனு கடந்த 25.04.2020 அன்றும், அதை தொடர்ந்து, இரண்டாவது மேல் முறையீட்டு மனு மாநில தகவல் ஆணையர் அவர்களிடம் கடந்த 01.06.2020 அன்று கொடுக்கப்பட்டு SA.No.4338/2021

ஆகும். அதன் பேரில் மாநில தகவல் ஆணையர் அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டதின் காரணமாக, மேற்படி மனுதாரர் கோரிய பணப்பற்று ரசீது ஆவணங்கள் கடந்த 08.04.2021 அன்று மனுதாரரிடம் எதிர்மனுதாரரால் கொடுக்கப்பட்டது.

ii. மனுதாரர் கோரிய பணப்பற்று ரசீது அவணங்களை சரியாக தரவில்லை என்று உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் மாநில தகவல் ஆணையர் அவர்களிடம் மனுக் கொடுக்கப்பட்டது, நாள்.28.04.2021. அதன் பேரில் மாநில தகவல் ஆணையர் அவர்கள், எதிர் மனுதாரர் கொடுத்த ஆவணங்களை பெற்றுக் கொள்ளுமாறு, தொலைபேசியில் தெரிவித்தார்.

iii. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கிடைக்கபெற்ற சேவைக்கான பணப்பற்று ரசீது மற்றும் ரசீதுகளின் நாள் விவரங்களை குறிப்பிட்டு மாநில தகவல் ஆணையர் அவர்களுக்கு பதிவு தபால் மூலம், கடந்த 03.07.2021 அன்று கடிதம் மூலம் பார்வைக்கு தெரிவித்து உறுதி செய்யப்பட்டுள்ளது.

iv. மேற்குறிப்பிட்ட 6 நிறுவனங்களில் கழிவுகள், குப்பைகளை எடுப்பதற்கான சேவை கட்டணம் கணினி மூலம் வரவு வைக்கப்பட்ட பணப்பற்று ரசீது (பில்) சரியாக எதிர் மனுதாரர், மனுதாரருக்கு தரப்படவில்லை என்பது உறுதியாகிறது.

v. மேலும் மனு விசாரணைக்கு ஏற்கும் வகையில் அதாவது 01.01.2017 முதல் 21.03.2020 வரையில் சேவைக் கட்டணம் பெற்றதற்கான கணினி மூலம் வரவு வைத்து பணப்பற்று ரசீது சரியாக வழங்கப்படவில்லை. இதன் மூலம், சேவைக்கான கட்டணத்தை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் லஞ்சமாக பெற்று கொண்டு முறைகேடு செய்துள்ளது. இதன் மூலம் உறுதியாகிறது.

vi. அதாவது ஒரு நிறுவனத்திற்கு ஒரு மாதத்திற்கு சேவைக் கட்டண பணப்பற்று ரசீது 1 பில் என்றாலே, 1 வருடத்திற்கு ஒரு நிறுவனத்திற்கு 12 பணப்பற்று ரசீது பில் வரவு வைக்கப்பட வேண்டும், மனுதாரருக்கு தரப்பட வேண்டும், என்பது குறிப்பிடதக்கது.

vii. இவ்வாறான நிலையில் எதிர் மனுதாரரிடம் சேவை கட்டணத்திற்கான பணப்பற்று ரசீது (பில்) எதுவும் இல்லை என்பது உறுதியாகி உள்ளது. இதன் மூலம் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் சேவை கட்டணத்தை லஞ்சமாக பெற்றுக் கொண்டு முறைகேடு செய்துள்ளார்கள் என்பது உறுதியாகிறது. இதன் மூலம் பல்லவபுரம் நகராட்சி, தற்பொழுது தாம்பரம் மாநகராட்சிக்கு பெரிதும் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

viii. ஆகையால் இது சம்மந்தமாக தணிக்கை துறை மூலம் மேற்படி வருவாய் இழப்பை ஆய்வு செய்து அதன் அறிக்கையின் பேரில் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் நடுவர் அவர்கள் உரிய ஆணை பிறப்பிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

5) இம்முறைமன்ற நடுவத்தில் 05.04.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகி தாம்பரம் மாநகராட்சியில் மாநகர நல அலுவலராகப் பணிபுரியும் Dr. ரா.பார்த்திபன் மற்றும் துப்புரவு அலுவலராகப் பணியாற்றும் திரு. சி. அறிவுச்செல்வம் ஆகிய இவர்கள் இருவரும் சேர்ந்து கீழ்காணுமாறு அவர்களுடைய வாக்குமூலத்தை அளித்துள்ளார்கள்:-

மனுதாரர் திரு. A.S. மோகன் என்பவரின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட சரவணாா ஸ்டோர்ஸ், அடையாறு ஆனந்த பவன், புஹாரி ஓட்டல், தி சென்னை சில்க்ஸ், பாலாஜி பவன் மற்றும் ஸ்ரீபாலாஜி சிறப்பு மருத்துவமனை போன்றவற்றிற்கு கடந்த 2017 முதல் சொத்து வரியுடன் திடக் கழிவு சேவைக்கட்டணம் (SUC) சேர்த்தே வசூலிக்கப்பட்டு வருகின்றன என்கின்ற விவரத்தையும், இவை 6 மாத காலத்திற்கு ஒருமுறை என முறையாக வசூலிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும், மேற்கண்ட வணிக வளாகங்கள் மற்றும் ஓட்டல், மருத்துவமனை போன்ற கட்டடங்களின் உரிமையாளர்களிடமிருந்து 2018ம் ஆண்டு முதல் சொத்து வரி மற்றும் திடக்கழிவு வரியை வசூலித்ததற்கான விவரங்களை இம்முறைமன்றத்தில் இன்னும் ஓரிரு நாட்களில் சமர்பிக்கிறோம் என தெரிவித்துக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

6) தாம்பரம் மாநகரட்சி ஆணையாளர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த தனது 11.04.2022 நாளிட்ட அறிக்கையில்:–

“தாம்பரம் மாநகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வுணிக நிறுவனங்களுக்கு திடக்கழிவு மேலாண்மை சேவைக்கட்டணம் சொத்து வரியுடன் சேர்த்து வசூலிக்கப்பட்டு கணினி மூலம் ரசீது வழங்கப்பட்டு வருகிறது. புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள 1. சரவணா ஸ்டோர், 2. அடையாறு ஆனந்த பவன், 3. புஹாரி ஹோட்டல், 4. பாலாஜி பவன், 5. தி சென்னை சில்க்ஸ், 6. ஸ்ரீபாலாஜி சிறப்பு மருத்துவமனை ஆகிய நிறுவனங்களின் திடக்கழிவு சேவை கட்டணம் சொத்துவரியுடன் சேர்த்து 2017–2018–ம் ஆண்டு முதல் நிர்ணயம் செய்யப்பட்டு தொடர்ந்து சேவைக்கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. 2017–ம் ஆண்டு முதல் சேவைக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டதற்கான கணினி ஆவணம் இத்துடன் இணைத்து சமர்பிக்கப்படுகிறது” என்று தெரிவித்துள்ளார்.

7) இந்நேர்வில் மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் திரு.A.S.மோகன் என்பவர் தாம்பரம் மாநகராட்சி நிறுவாகத்தினர் சரவணா ஸ்டோர்ஸ், அடையாறு ஆனந்தபவன், புஹாரி ஓட்டல், சென்னை சில்க்ஸ், பாலாஜி பவன் மற்றும் ஸ்ரீ பாலாஜி சிறப்பு மருத்துவமனை போன்ற நிறுவனங்களுக்கு சொத்து வரியுடன் கூடிய திடக்கழிவுக்கான வரியை கணினி மூலம் பணப்பற்று பெறாமல் போலி ரசீதினை அளித்து நிர்வாகத்தினர் கையாடல் செய்துள்ளதாகவும், இவ்வாறு முறைகேடு செய்யும் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தனது மனுவில் புகார் அளித்துள்ளார்.

தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் 04.04.2022 மற்றும் 11.04.2022 தேதியிட்ட அறிக்கைகளிலிருந்து மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள வணிக நிறுவனங்களுக்கு திடக்கழிவு சேவைக் கட்டணம் சொத்துவரியுடன் சேர்த்து ஆறு மாதத்திற்கு ஒரு முறை வசூலிக்கப்பட்டு கணினி மூலம் ரசீது வழங்கப்பட்டு வருகிறது என்றும், இதுபோன்ற நிறுவனங்களிலிருந்து

நேரடியாக சேவைக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை என்பதும் அறிய முடிகிறது. இதற்கு ஆதார ஆவணமாக கணினி மூலம் வழங்கப்பட்ட ரசீதுகளின் நகல்கள் மூலம் தெளிவாகிறது.

மேலும் மனுதாரரால் புகார் அளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு திடக்கழிவு சேவைக் கட்டணம் சொத்துவரியுடன் சேர்த்து 2017–2018 ஆம் ஆண்டு முதல் சேவைக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டதற்கான கணினி ஆவணத்திலிருந்து நகராட்சி நிர்வாகத்தினரால் சேவைக் கட்டணம் வசூல் செய்வதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என உறுதி செய்யப்படுகிறது.

எனவே, தாம்பரம் மாநகராட்சி அலுவலர்களின் அறிக்கைகள் மற்றும் அவர்களது வாக்குமூலம் ஆகியவற்றிலிருந்து தாம்பரம் மாநகராட்சியில் திடக்கழிவு சேவைக்கட்டணம் வசூல் செய்வதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என்பதால், தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கையை ஏற்று இம்முறையீட்டு மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. A.S. மோகன்,
நெ.8, முதல் தெரு, தி.சு.லட்சுமணன் நகர்,
குரோம்பேட்டை, சென்னை 600 044.

2) ஆணையாளர்,
தாம்பரம் மாநகராட்சி.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலருக்காக.

5.5.2022